**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், திருவாரூர்**

**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்)**

**முன்னிலை : திருமதி.Dr.R. லதா, M.A., M.L., Ph.D.,**

**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 23 ம் நாள்**

**மோ.வா.வி.இ.கோ.மனு எண்.88/2024**

**(CNR No. TNTV02-005856 -2024)**

**ராஜேந்திரன்,**
**த/பெ.ராமையன்,**
**நடுத்தெரு,**
**புதூர்,**
**திருநெல்லிக்காவல்,**
**திருவாரூர் தாலுக்கா & முன்சிபி,**
**திருவாரூர் மாவட்டம்.** **...மனுதாரர்**

**/எதிர்/**

**1) மணிகண்டன்,**
**த/பெ.குப்புசாமி,**
**1/128 அகர கொளப்பாடு,**
**கொளப்பாடு,**
**திருக்குவளை தாலுக்கா,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.**

**2) கிளை மேலாளர்,**
**சோழமண்டலம் எம்எஸ் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,**
**எண்.7 ரமேஷ் நகர்,**
**புதிய ஹவுசிங் யூனிட் பேருந்து நிறுத்தம் எதிர்புறம்,**
**புதுக்கோட்டை ரோடு,**
**தஞ்சாவூர் மாநகரம்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.** **...எதிர்மனுதாரர்கள்**



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:40:33 +0530

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில்11/05/2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கொடுக்கப்படும் படிவமும் பிறப்பிக்கப்படும் உத்தரவும்**

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி: | | ராஜேந்திரன், வயது.61<br>த/பெ.ராமையன்,<br>நடுத்தெரு,<br>புதூர்,<br>திருநெல்லிக்காவல்,<br>திருவாரூர் தாலுக்கா & முன்சிபி,<br>திருவாரூர் மாவட்டம். | |
| (b) | எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி | | 1) மணிகண்டன்,<br>த/பெ.குப்புசாமி,<br>1/218 அகர கொளப்பாடு,<br>கொளப்பாடு,<br>திருக்குவளை தாலுக்கா,<br>நாகப்பட்டினம் மாவட்டம்.<br><br>2) கிளை மேலாளர்,<br>சோழமண்டலம் எம்எஸ் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், எண்.7 ரமேஷ் நகர், புதிய ஹவுசிங் யூனிட் பேருந்து நிறுத்தம் எதிர்புறம்,<br>புதுக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர் மாநகரம்,<br>தஞ்சாவூர் மாவட்டம். | |
| (c) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | - | 06.11.2024 | |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | - | 08.08.2025 | |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | - | ரூ.7,50,408/- | |
| (f) | வட்டி விகிதம் | - | 7.5% | |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | - | 06.11.2024 | |
| | | | 1) மனு/வழக்குரை நீ.ம.க | 6877.00 |
| | | | 2) வக்காலத்து | 10.00 |



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:40:51 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 3) படி மெமோ | 09.00 |
| | | | 4) வழக்கறிஞர் கட்டணம் | 14,504.00 |
| | | | மொத்தம் | 21,400.00 |
| i) | உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | | இழப்பீட்டு தொகை ரூ.7,50,408/-ஐ 2 ஆம் எதிர்மனுதாரர்/காப்பீட்டு நிறுவனம் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும். | |
| (j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | - | இல்லை | |
| (k) | இழப்பீட்டு தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | | இழப்பீட்டுத் தொகை ரூ.7,50,408/- மனுதாரருக்கு, 2ம் எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR882024CMG, IFSC. SBIN0004266 – இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் | |
| (l) | இழப்பீட்டு தொகை கோருரிமையாளர் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | | 2 ஆம் எதிர்மனுதாரர்/காப்பீட்டு நிறுவனம் தீர்ப்பாணை தொகையை வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், மனுதாரர் மனுதாக்கல் செய்வதன் மூலம் மனுதாரர்களது வங்கி கணக்கில் பெற்றுக் கொள்ளலாம் | |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | - | இல்லை. | |
| (o) | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | - | ரூ.372.50/- | |
| (p) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | - | 6504/- | |



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:40:59 +0530

| | | | |
|---|---|---|---|
| (q) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | - | இல்லை. |

இம்மனு கடந்த 06.11.2024 ஆம் தேதியன்று திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 21.11.2024 அன்று M.C.O.P.No.154/2024 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு உ.வி.மு.ச.பிரிவு 24 ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பின்னர் 22.11.2024 அன்று இந்நீதிமன்றத்தால் M.C.O.P.No.88/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவானது 05.08.2025 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.N.விநாயகமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர்களாக அறிவிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இத்தீர்ப்பாயம் வழங்கும்.

<u>ஆணையுரை</u>

இம்மனுவானது மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166-இன் கீழ் கடந்த 16.10.2023 தேதியன்று மனுதாரர் ராஜேந்திரன் வாகன விபத்தில் காயமடைந்ததற்கு ரூ.50,00,000/- இழப்பீட்டு தொகையை 7.5 % ஆண்டு வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனு உரை சுருக்கம்.</u>

(i) மனுதாரர் ராஜேந்திரன் கடந்த 16.10.2023 அன்று நாகப்பட்டினம், வலிவலத்தில் கொத்தனார் வேலைக்கு சென்றுவிட்டு மாலை சுமார் 3.45 மணியளவில் TN-50-L-7854 என்ற எண் கொண்ட SUPER XL இருசக்கரவாகனத்தில் வீட்டிற்கு திரும்பி வந்துள்ளார். அப்போது வலிவலம் - மாவூர் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தபோது கோமல் வெள்ளையாற்று பாலம் அருகில் எதிர்திசையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN-51-AP-3496 என்ற பதிவெண் கொண்ட TATA ACE வாகனத்தை அதன் ஓட்டுநர் ஆரன் அடிக்காமலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிவந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதியதில் மனுதாரர் கீழே விழுந்துள்ளார். அதில்



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:41:25 +0530

மனுதாரருக்கு வலதுகால் முட்டிக்கு மேலும், வலதுகை விரலில் எலும்பு முறிவும், வலதுபக்க தலையில் அடிபட்டு மண்டை உடைந்தும், உடலெங்கும் ரத்தகாயமும் ஏற்பட்டது. பின்னர் மனுதாரர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 16.10.2023 முதல் 02.11.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தபோது வலதுகால் முட்டி, வலதுகால் மேல் பாதம், தலை ஆகிய பகுதிகளில் தையல் போடப்பட்டும், வலதுகாலில் ஏற்பட்ட எலும்பு முறிவு சிகிச்சைக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்படி காயங்கள் பூரணமாக குணமாகாததால் மனுதாரர் தற்போது வரை வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

(ii) இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரான மணிமாறன் என்பவரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே காரணம் என்பதால் திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் குற்ற எண்.618/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 337 ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் விபத்திற்கு முன்பு கொத்தனார் வேலை பார்த்து நாளொன்றுக்கு ரூ.1000/-வீதம் மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்துள்ளார். மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் முன்பு போல வேலைக்கு செல்லமுடியாமல் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

(iv) விபத்தை ஏற்படுத்திய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது எனவும், வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு விபத்து சமயம் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்து வந்துள்ளது எனவும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயம் அமலில் இருந்து வருகிறது. ஆகவே, மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ரூ.50,00,000/- எதிர்மனுதாரர்கள் கொடுக்க உத்தரவிடுமாறு இம்மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) 1, 2 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:41:12 +0530

4) <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினாக்கள் யாதெனில்:</u>

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

(2) மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

(3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?

5) மனுதாரர் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட ஊன தகுதி சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>எழுவினா எண் 1-ற்கான தீர்வு:-</u>

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

(i) மனுதாரர் ராஜேந்திரன் கடந்த 16.10.2023 அன்று நாகப்பட்டினம், வலிவலத்தில் கொத்தனார் வேலைக்கு சென்றுவிட்டு மாலை சுமார் 3.45 மணியளவில் TN-50-L-7854 என்ற எண் கொண்ட SUPER XL இருசக்கரவாகனத்தில் வீட்டிற்கு திரும்பி வந்தபோது வலிவலம் - மாவூர் ரோட்டில் கோமல் வெள்ளையாற்று பாலம் அருகில் எதிர்திசையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN-51-AP-3496 என்ற பதிவெண் கொண்ட TATA ACE வாகனத்தை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர் ஓட்டிவந்த வாகனத்தின் மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்பதை நிரூபிக்கும்பொருட்டு திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையானது ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தினால் மனுதாரர் காயமடைந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதை நிரூபிக்கும்பொருட்டு விபத்து பதிவேடு ம.சா.ஆ.2, மெடிக்கோ லீகல் ஒப்பீனியன் ம.சா.ஆ.3 மற்றும் டிஸ்சார்ஸ் சம்மரி ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான வாகனம் மேற்படி விபத்திற்கு காரணம் என்பதை



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:41:38 +0530

நிரூபிக்கும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிவந்த மணிமாறன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பது ம.சா.ஆ.7 மூலம் நிரூபணமாகிறது.

(ii) மேலும், இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிவந்த மணிமாறன் தான் காரணம் என குறிப்பிட்டு சாட்சியும் அளிக்கப்பட்டுள்ள நிலையிலும், மணிமாறனுக்கு எதிராகவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதாலும் அதனை மறுத்து மனுதாரரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும், சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் மேற்படி விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என எழுவினா எண் 1-ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

7) <u>எழுவினா எண் 2-ற்கான தீர்வு:-</u>

(2) மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

இந்நிலையில் எழுவினா 1ன்படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவாலாயே ஏற்பட்டுள்ளது என தீர்வு காணப்பட்டுள்ளதால் 16.10.2023 ஆம் தேதி ஏற்பட்ட வாகன விபத்தில் தொடர்புடைய 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயம் அமலில் இருந்து வந்துள்ளது என்பது காப்பீடு பாலிசி ம.த.சா.ஆ.6 மூலம் நிரூபணமாகிறது. ஆகவே, பகரபொறுப்பாளி என்ற வகையில் மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் என எழுவினா எண்.2 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.



LATHA
Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.08 10:42:01 +0530

8) <u>எழுவினா எண் 3-ற்கான தீர்வு:</u>

(3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(i) மனுதாரர் விபத்திற்கு முன்னர் கொத்தனார் வேலை பார்த்து நாளொன்றுக்கு ரூ.1000/- வீதம் மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார். ஆனால், அதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆகவே, மனுதாரர் கொத்தனார் வேலை பார்த்து வந்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டாலும் வருமானத்திற்குரிய சான்றுகள் எதுவும் தாக்கல் செய்யாததால் மனுதாரரின் மாத வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பில்

IN THE SUPREME COURT OF INDIA
CIVIL APPELLATE JURISDICTION

CIVIL APPEAL NOS.662-664 OF 2014
(ARISING OUT OF SLP(C) NO(s). 16739-16741 OF 2012)

SYED SADIQ ETC. …APPELLANTS

Vs.

DIVISIONAL MANAGER, UNITED INDIA INS. CO. … RESPONDENT

2008 ம் ஆண்டு காய்கறி வியாபாரிக்கு Notional Income ரூ.6,500/- ஆக எடுத்துக்கொள்ளப்பட்டு மாத Notional Income நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த விபத்தானது 2023 ஆம் ஆண்டு நடந்துள்ளதால் பணவீக்க குறியீடு அடிப்படையில் மனுதாரருக்கான மாத வருமானம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

$$\frac{Rs.6{,}500 \times 348}{129} = Rs.17{,}534$$

cost of inflation index for the year 2023-2024 ன்படி மனுதாரரின் மாத வருமானம் ரூ.17,534/- நிர்ணயம் செய்யப்படுகிறது.



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:42:18 +0530

(ii) மேலும், தீர்ப்பாயத்தின் உத்தரவின் பேரில் மனுதாரர் அரசு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவக்குழு பரிசோதனைக்கு உட்படுத்தியபோது ஊன தகுதி சான்றில்

" Minimum 40% Permanent Disability/Partial Disability of either upper of Lower Limbs or 50% Permanent partial disability of both upper and Lower limbs together"

என குறிப்பிட்டு 40% கொடுக்கப்பட்டுள்ளது. அது நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரருக்கு முழங்கால்களுக்கு மேல்பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆகவே, அவரால் சுமார் எவ்வித பணியும் செய்திருக்க முடியாது என்பதால் 12 மாத காலத்திற்கு ரூ. 17,534x12 = ரூ.2,10,408/- வருமான இழப்பாக கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

மேலும், அரசு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுமத்தால் 40% ஊன தகுதி சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின்படி வழிகாட்டுதலின்படி

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 10.01.2025

CORAM:

THE HONOURABLE MR.JUSTICE M.DHANDAPANI

CMA.No.13 of 2025

M.RevanthKumar ...Appellant

Vs.

1. M/s.Sun-X-Concrete India Private Limited,
No.5, Ramesh Nagar, 3rd Street,West
Tambaram, Chennai – 600 045.

2. The United India Insurance Company Ltd.,
Silingai Building, No.134,
Greams Road, Chennai – 600 006 ...Respondents



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:42:32 +0530

மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்திற்கு சதவிகிதமுறைப்படி நிர்ணயம் செய்வது சரியானது என முடிவு செய்து அந்த வகையில் ஒரு சதவிகித ஊனத்திற்கு ரூ.10,000/- எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதன்படி மனுதாரருக்கு (40 x 10000 = 1,00,000/-) ரூ.4,00,000/-ம் பெற தகுதியுடையவர் ஆவார்.

(iii) மேலும், இம்மனுதாரருக்கு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீடுகளை கணக்கிட இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

ஆக, மனுதாரருக்கு கிடைக்கப்பெற வேண்டிய மொத்த இழப்பீட்டு தொகை என்ற வகையில்,

| | | | |
|---|---|---|---|
| 1) | வருமான இழப்பு | ரூ. | 2,10,408.00 |
| 2) | வலி, துன்பத்திற்கான இழப்பீடு | ரூ. | 1,00,000.00 |
| 3) | ஊட்டச்சத்திற்காக | ரூ. | 25,000.00 |
| 4) | ஆடை அணிகலன் மற்றும் இதர சேதாரத்திற்கு | ரூ. | 10,000.00 |
| 5) | போக்குவரத்து செலவுக்காக | ரூ. | 5,000.00 |
| 6) | ஊன தகுதி சான்று | ரூ. | 4,00,000.00 |
| | மொத்தம் | ரூ. | 7,50,408.00 |

(iv) மேற்கண்டவாறு கணக்கிடப்பட்ட வகையில் ரூ.7,50,408/- மனுதாரர் பெற உரிமையுள்ளவர் என எழுவினா எண்.3 ற்கு இத்தீர்ப்பாயத்தால் தீர்வு காணப்படுகிறது.

(v) இம்மனுவில், எழுவினா எண்.2 ல், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று தீர்வு காணப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மேற்கண்ட தொகையான ரூ.7,50,408/-ஐ 2 ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று இப்பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:42:42 +0530

9) முடிவாக, இந்த மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(1) மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ. 7,50,408/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

(2) மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு, 2 ம் எதிர்மனுதாரர் இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR882024CMG, IFSC. SBIN0004266 – இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்றும்

(3) அந்த தொகையினை 2 ம் எதிர்மனுதாரர் அவரது வங்கி கணக்கில் இருந்து இந்த நீதிமன்றத்தில் உள்ள வங்கி கணக்கில் செலுத்தி, அவ்வாறு செலுத்தியதற்கான வங்கிக்கு அனுப்பிய அறிவுறுத்தல் நகலை உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும் என்றும்,

(4) மேற்படி இழப்பீட்டு தொகை வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், மனுதாரர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

(5) மனுதாரர் மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டியது இருந்தால் அதை இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வரையில் தீர்ப்பாணை தொகையை மனுதாரர் பெறத்தக்கவரல்ல என்று உத்தரவிடப்படுகிறது.

(6) மனுதாரர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.14,504/- என நிர்ணயம் செய்தும் உத்தரவிடப்படுகிறது.



LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:42:52 +0530

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 11.05.2020 தேதியிட்ட முன்தீர்ப்பான Cholamandalam General Insurance company Ltd Vs Ayyannar and others Tr.C.M.P.No.s 264 to 281/2020 உத்தரவில் குறிப்பிட்டுள்ளப்படி தீர்ப்பாணை தொடர்பான அனைத்து விவரங்களும் இந்த உத்தரவிலேயே கொடுக்கப்பட்டு உள்ளடங்கி இருப்பதால் இந்த உத்தரவை தீர்ப்பாணையாகவும் கருதவேண்டுமென உத்தரவிடப்பட்டதன்பேரிலும் தனியானதொரு தீர்ப்பாணை தேவையில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.)

இத்தீர்ப்புரையானது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 08-ஆம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதை பிழைதிருத்தம் செய்து திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA
DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.08 10:43:00 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர்

I. <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்-</u>

| | |
|---|---|
| ம.சா.1 | திரு.ராஜேந்திரன் (மனுதாரர்) |

II. <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 17.10.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை - நகல் |
| ம.சா.ஆ.2 | 16.10.2023 தேதியிட்ட விபத்து பதிவேடு - நகல் |
| ம.சா.ஆ.3 | அரசு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த மெடிக்கோ லீகல் ஒப்பீனியன் - நகல் |
| ம.சா.ஆ.4 | 02.11.2023 தேதியிட்ட அரசு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரி - நகல் |
| ம.சா.ஆ.5 | 25.10.2023 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை - நகல் |
| ம.சா.ஆ.6 | 24.02.2023 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு பாலிசி - நகல் |
| ம.சா.ஆ.7 | 30.09.2018 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் - நகல் |
| ம.சா.ஆ.8 | 16.11.2023 தேதியிட்ட இறுதியறிக்கை - நகல் |
| ம.சா.ஆ.9 | மனுதாரர் ஆதார் அட்டை - நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.10 | மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் - நகல் |

## III. நீதிமன்ற சான்றாவணங்கள்

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – ஊன சான்றிதழ் |

## IV. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் - இல்லை

## V. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை

LATHA Digitally signed by LATHA DN: cn=LATHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2025.08.08 10:43:08 +0530

**மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**